GSMA

ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்ட சமூகம்

# மொபைல் இணைய திறன் பயிற்சிக் குறிப்பு

அடிப்படை மொபைல் இணைய திறன்கள்
தொடர்பில் மக்களுக்கான பயிற்சி வழிகாட்டி



Copyright © 2017 GSM Association

# தொகுதி 7 – இணையத்தில் பாதுகாப்பாக இருக்கும் வழிமுறை (Online Safety)


# Bitesize Training

## அது என்ன ?



"உங்களுக்கு இணைய பயனுடையது என்றபோதிலும், உலகிலுள்ள எவரும் நுழையும் வகையில் அது திறந்திருக்கும் என்பதையும் மறக்காதீர்கள். ஆகையால் உண்மையான வாழ்வில் மக்கள் நடமாடும் இடமாக (உதா: பொதுச் சந்தை) கருத வேண்டும். பாதுகாப்பாக இருப்பது மிக முக்கியம்."

### உங்களுக்கு தேவையானவை



ஸ்மார்ட் ∴போன்




பாதுகாப்பு அறிவுறுத்தும் போஸ்டர்

### அதனை எதற்கு பயன்படுத்துவது?

**"இணைய பாதுகாப்பு குறிப்பு"** பிரதியை வழங்குங்கள்

"மக்கள் நடமாடும் பொது இடமாக கருதி, இவற்றை செய்யுங்கள்:

1. உங்களுக்கு தெரியாத நபர்கள், தொந்தரவு தருபவர்களை "பிளக்" செய்யுங்கள்.
2. உங்கள் தனிப்பட்ட தகவல்கள் இரசியமாக இருக்கட்டும். (உதா: நீங்கள் யார்? எங்கிருக்கின்றீர்கள்? உங்கள் பாதுகாப்பு கடவுச்சொல்)
3. நீங்கள் காணும் அல்லது அனுபவிக்கும் ஏதாவது உங்களை அசௌகரியப்படுத்தினால், அதனை நம்பிக்கைக்குரிய ஒருவரிடம் கூறுங்கள்.
4. கண்ணியமாகவும், மரியாதையுடனும் மற்றவர்களுடன் இருங்கள். எவரையும் தொந்தரவு செய்யாதீர்கள்.

**பயிற்சியாளர்:** உங்களுக்கு நேரம் இருந்தால், குறிப்புகள் தொடர்பாக உங்கள் சொந்த அனுபவங்களை உதாரணமாக கூறுங்கள்.

# பாதுகாப்பாக இருப்பது எப்படி?

**பயிலுனர்களிடம் கேளுங்கள்:** எந்த சேவைக்கான பாதுகாப்பை எதிர்பார்கின்றீர்கள்? (WhatsApp,YouTube, Wikipedia, Facebook, KaiOS, Android அல்லது Mobile Money).

**கீழுள்ளவற்றை தெளிவுபடுத்துங்கள்:**

**WhatsApp:** "நீங்கள் அறியாதவர் உங்களுக்கு WhatsApp செய்திகள் அனுப்பினால் அல்லது தொந்தரவு செய்தால், அவற்றை தடுக்க நீங்கள் விரும்பினால், அவர்களை "பிளக்" செய்யலாம். அதன்பின்னர் அவர்களால் உங்களை தொடர்புகொள்ள முடியாது.

**"பிளக் செய்யும் முறையை"** போஸ்டர் காண்பித்து, படிமுறை படிமுறையாக தெளிவுபடுத்துங்கள்.

---

**YouTube திறந்து காட்டுங்கள்:** "நீங்கள் YouTube பார்க்கும்போது தவறான அல்லது விரும்பத்தகாத வீடியோ இருப்பின், முந்தைய பக்கத்திற்கு சென்று, நீங்கள் தேட பயன்படுத்திய வார்த்தையை புதிதாக டைப் செய்து, அதற்கமைய வரும் வீடியோவை பாருங்கள்."

**YouTube திறந்து காட்டுங்கள்:** மீள செல்லும் பொத்தான் (back button) அழுத்தி, முன்னர் டைப் செய்த, தேடும் வார்த்தையை அழித்துவிட்டு, புதிய வார்த்தையை டைப் செய்து தேடுங்கள்.

---

**Wikipedia:** "நீங்கள் Wikipedia இல் இருந்தால், அதிலுள்ள தகவல்கள் உலகிலுள்ள சாதாரண நபர்கள் வழங்கிய தகவல்கள் என்பதை நினைவில் கொள்க. அவற்றின் உண்மைத்தன்மையை அறிந்தகொள்ள அதன் ஆதாரத்தை சரிபாருங்கள்."

**Wikipedia திறந்து காட்டுங்கள்:** பயிலுனர்களுக்கு Wikipedia பக்கங்களின் கீழுள்ள மூலதார பட்டியலை காண்பியுங்கள்.

---

**Facebook:** "நீங்கள் Facebook இல் இருந்தால், உங்கள் தனிப்பட்ட பக்கத்தை பார்ப்பவர்கள் மற்றும் உங்களை தொடர்புகொள்பவர்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது தொடர்பாக எடுத்துரையுங்கள்"

**Facebook திறந்து காட்டுங்கள்:** 'தனியுரிமை குறுக்கு வழிகள்' (Privacy Shortcuts) காண்பித்து, பக்கத்தை பார்ப்பவர்கள் மற்றும் நட்பு வேண்டுகோள் விடுத்து, உங்களை தொடர்புகொள்ள கூடியவர்களை வரையறுக்கும் முறையை காண்பியுங்கள்.

**KaiOS:** "நீங்கள் KaiOS ∴போன் பயன்படுத்தினால், நீங்கள் பாதுகாப்பாக இருக்கக்கூடியதாக பல மாற்றங்கள் செய்ய முடியும். அது உங்கள் ∴போனிலுள்ள 'தனியுரிமை மற்றும் பாதுகாப்பு" பகுதியில் உள்ளது.

**KaiOS தெளிவுபடுத்துங்கள்:** KaiOS பிரதான மெனுவில் உள்ள 'தனியுரிமை மற்றும் பாதுகாப்பு' (privacy and security) தேடும் வழிமுறையை பயிலுனருக்கு அறிமுகப்படுத்துங்கள்.

---

**Android:** "உங்கள் Android ∴போனை சில நேரம் பயன்படுத்தாமல் இருந்தால், பெற்றறி சேமிப்பிற்காக அதன் திரை செயற்படாதிருக்கும். அதனை மீள செயற்படுத்த "கடவுச் சொல்" (password) இருந்தால், இன்னொருவரால் உங்கள் ∴போனை பயன்படுத்த முடியாது."

**Android இல் இதனை தெளிவுபடுத்துங்கள்:** ∴போனின் பாதுகாப்பிற்காக பாதுகாப்பு கடவுச் சொல் (PIN / passcode) போடும் முறையை பயிலுனருக்கு காண்பியுங்கள்.

---



**Mobile money:** "உங்கள் தனிப்பட்ட இரகசிய இலக்கம் (PIN number)உங்களுக்கு மட்டும் தெரிந்ததாக இருக்கட்டும். அதன் மூலமே உங்கள் கணக்கிற்கு உள்நுழைவதால் அதனை பாதுகாப்பாக வைத்திருப்பது மிக முக்கியம். மொபைல் மணி முகவருக்கு, வாடிக்கையாளர் சேவை ஊழியர்களுக்கு அல்லது வேறு எவருக்கும் - தனிப்பட்ட அல்லது SMS அல்லது இணையம் ஊடாக எவருக்கும் வழங்காதீர்கள்."

**Mobile money சேவை தொடர்பாக விளக்கப்படுத்துங்கள்:** சாதாரண மொபைல் மணி கொடுக்கல் வாங்கலுக்கு "இரகசிய இலக்கம்" (PIN) தேவைப்படும் விதத்தை பயிலுனருக்கு சொல்லிக் கொடுங்கள். (உதா: நண்பர் அல்லது குடும்ப உறுப்பினருக்கு பணம் அனுப்பும்போது)


## அது என்ன?

"நீங்கள் ஃபோனில் இணையம் பயன்படுத்தும்போது, நீங்கள் 'டேட்டா' (data) பயன்படுத்துகின்றீர்கள். நீங்கள் தொலைபேசி வலையமைப்பிலிருந்து டேட்டா கொள்வனவு செய்ய வேண்டும். இணையத்திலிருந்து சில செயற்பாடுகளுக்கு அதிக டேட்டா அளவு செலவாகும். இதனால் செலவும் அதிகரிக்கும்.


"நீங்கள் இணையத்திற்கு பயன்படுத்தும் "டேட்டா" வாங்கலாம். அது அழைப்பு மற்றும் செய்திகளுக்கு வாங்கும் முற்கொடுப்பனவு போன்றது. இணையத்திற்காக 'டேட்டா" உங்கள் தொலைபேசி வலையமைப்பு முகவர் அல்லது முற்கொடுப்பனவு என்ற வகையில் வாங்கலாம்"

"சிலநேரங்களில், இணையத் தரவுகள், "டேட்டா வவுச்சர்" அல்லது "டேட்டா கார்ட்" (data vouchers' or 'data cards') ஆக கொள்னவு செய்து உங்களுக்கே மொபைல் இணையத்தை செயற்படுத்தலாம்."

**உங்களுக்கு தேவையானவை**



ஸ்மார்ட் போன்




Cost Poster

## டேட்டா எதற்கு பயன்படுகின்றது?

**செலவீன போஸ்டரை காண்பியுங்கள்.**

"இணையத்தில் செய்யும் செயற்பாடுகளின் பன்முகத்தன்மைக்கு அமைய டேட்டா செலவாகும். வார்த்தைகள் குறைந்தளவும், புகைப்படங்களுக்கு அதைவிட சற்று அதிகமாகவும், இசை, பதிவிறக்கம் (டவுன்லோட்) செய்வதற்கு அதிகமும், ஸ்டிக்கர் மற்றும் ரிங்டோன்களுக்கு அதைவிட அதிகமும், வீடியோ பார்க்க, டவுன்லோட் செய்ய அதிகளவு டேட்டாவும் செலவாகும். ஆகையால் இணையத்தில் வீடியோவிற்கே அதிக டேட்டா செலவாகும்."

"சில இணையச்சேவைகள் அதிக டேட்டா பயன்படும் செயல்பாடுகளுடன் இணைக்கப்பட்டுள்ளன:

- **உதா:** YouTube வீடியோ பார்க்க அதிக டேட்டா செலவாகும்.
- **உதா:** Google இல் வார்த்தைகள் மற்றும் படங்கள் பார்க்க குறைந்த டேட்டா செலவாகும். வீடியோ பார்க்க அதிகம் டேட்டா செலவாகும்.

**விளக்கப்படுத்துங்கள்:** "கணினி மென்பொருட்களை மேம்படுத்துவதற்கு அதிக டேட்டா செலவாவதால், அதிக பணமும் செலவாகும்"

# உங்கள் டேட்டா செலவுகளை கண்காணிப்பது எப்படி?

**பயிற்சி பெறுநருக்கு ஃபோன் வழங்கி, இந்த நடைமுறைகளை பின்பற்ற உதவுங்கள்**

"நீங்கள் பயன்படுத்தியுள்ள "டேட்டா" அளவு மற்றும் அந்தந்த சேவைகளுக்கு செலவாகும் தரவு அளவு பற்றி அறிந்துகொள்ள டேட்டா பரிசோதிப்பது பிரயோசனமானது"

"அழைப்பு நேரம், குறுந்தகவல் மிகுதி தொடர்பாக அறிவதை போன்று டேட்டா மிகுதியையும் அறிந்துகொள்ள உங்கள் கையடக்க தொலைபேசி வலையமைப்பின் குறியீட்டை டைப் செய்து, அதன்மூலம் டேட்டா மிகுதியை அறிந்துகொள்ளலாம்

**குறிப்பு:** "நீங்கள் இணையத்தில் செய்ய எதிர்ப்பார்க்கும் செயற்பாடுகளுக்கமைய, உங்கக்கு பல்வேறு அளவுகளில் "டேட்டா" கொள்வனவு செய்யலாம். உங்கள் தேவைக்கேற்ப எவ்வளவு "டேட்டா" தேவைப்படும் என்பதை உங்கள் கையடக்க முகவரிடம் ஆலோசனை பெறுங்கள்"

# போஸ்டர்,
# கட்அவுட் மற்றும்
# தகவல் பிரதிகள்

# இணையத்தில் பாதுகாப்பாக இருக்க குறிப்புகள்



நீங்கள் அறியாத நபர்கள்
மற்றும் தொந்தரவு தருபவர்களை
“பிளக்” செய்யுங்கள்



உங்கள் தனிப்பட்ட தகவல்களை
இரகசியமாக வைத்திருங்கள்



நீங்கள் காணும், அனுபவிக்கும்
ஏதாவது உங்களை
அசௌகரியப்படுத்தினால், அது
தொடர்பாக உங்களது
நெருங்கியவரிடம் கூறுங்கள்




கண்ணியமாகவும்,
மரியாதையுடனும்
மற்றவர்களை
நடத்துங்கள்

Icon Cutouts – Online Safety






Icon Cutouts - Online Safety






# Gmail இல் “பிளக்” செய்வது எவ்வாறு?


1 → 2 → 3




# Chrome இல் வரலாற்றை (History) தேடுவது




# பிள்ளைகளின் பாதுகாப்பிற்காக **Play Store** இல் பெற்றோர் கட்டுப்படுத்தும் திட்டம் **(Parental Controls)** தயாரித்தல்



# Facebook இல் தவறான பக்கம் தொடர்பாக முறைப்பாடு செய்தல்




# Facebook இல் “பிளக்” செய்வது எவ்வாறு?



# YouTube இலுள்ள தகுதியற்ற வீடியோ தொடர்பாக முறையிடுதல்

1 → 2 → 3



# தவறான தகவல்கள்


கவனமாக இருங்கள்!

உங்களுக்கு சந்தேகமெனின், நம்பிக்கையானவரிடம் கேளுங்கள்!

நன்கு சிந்திக்காமல் மற்றவர்களுக்கு பகிர வேண்டாம்!

ஏனைய பக்கங்களிலும் அதனை பரிசோதனை செய்யுங்கள்

முறையிடுங்கள்



# சான்றிதழ்

**அடிப்படை மொபைல் இணைய திறன்கள் பயிற்சி**

வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டுள்ளது

திகதி

கையொப்பம்



# சான்றிதழ்

**அடிப்படை மொபைல் இணைய திறன்கள் பயிற்சி**

வெற்றிகரமாக நிறைவுசெய்யப்பட்டுள்ளது

திகதி

கையொப்பம்